வண்ணாத்திப் பூச்சி

எங்கள் வீட்டுக்கு எதிர்த்த பங்களாவில் பேய்கள் தான் வசிக்கின்றனவோ என்று நான் எண்ணியதுண்டு. கண்ணுக்குத் தெரியாமல் நிச்சயமாக வாழும் பிராணிக்குத் தானே பேய் என்று பெயர். அவ்வளவு பெரிய பங்களாவில் இருபது பேராவது இருந்தாக வேண்டும். ஆனால், என் கண்ணுக்குப் பட்டதெல்லாம் ஒரு தோட்டக்காரன் தான். தனக்குப் பெயர் வண்டு என்று சொல்லுவான். அதுதான் பெயரா என்று தடுத்துக் கேட்டபொழுது, 'திருத்தணியில் மொட்டை அடித்த காலத்திலே ஐயா வைத்த பெயர் அதுதான்' என்று தாயார் சொன்னதாகச் சொன்னான். தோட்டத்தில் வாழ்வை நடத்தும் ஜீவனுக்கு வண்டு என்ற பெயர் எப்படி இருந்தாலும், பொருத்தம்தானே என்று ஏற்றுக் கொண்டேன்.

தோட்டக்காரனைவிட முக்கியமான விஷயமென்ன வென்றால், அவன் தலை 'கிராப்பு'. அதற்கு என்ன பெயர் என்று எனக்குத் தெரியாது. அவனுக்கும் தெரியாது. தமிழ்த் திரைப்படக் கிராப்பாக இருந்தது. பெயரோ, வண்டு- கிராப்போ, சினிமாக் கிராப்பு. ஆள்? அவனுக்கு இருபத்திஐந்து வயதுதானிருக்கும். அழகென்று சொல்ல முடியாது. ஆனால் நல்ல முகவெட்டு.

வண்டு ஒருவன்தான் பங்களாவை விட்டு வெளியே வந்து நான் பார்த்திருக்கிறேன். பங்களாவை விட்டு

வெளியே மற்றொரு பொருள் இரவில்தான் வரும். அது தான் ‘ நைட் குவீன்’ * வாசனை.

வண்டு சில சமயம் எங்கள் வீட்டுக்கு வந்து குழம்பு, வியஞ்சனம் ஏதாவது வாங்கிப் போவான். அதிலிருந்து அவனுக்குக் கல்யாணம் ஆகவில்லை என்று தெரிந்ததே ஒழிய, அவனுக்கு வேறு உறவினர் உண்டா இல்லையா என்பது தெரியவில்லை.

ஒருநாள் பகல் இரண்டு மணி இருக்கும். பங்களாவுக்குள்ளேயிருந்து ஒரு பாட்டு காதில் விழுந்தது. தவிட்டுக் குருவி சினிமாப் பாட்டு பாடினாற்போல் இருந்தது அது. எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. பேயடைந்த பங்களாவிலிருந்து சினிமாப் பாட்டா ? எங்கள் வீட்டு மாடிக்குப் போய், பங்களாப் பக்கம் கண்ணோட்டம் விட்டேன். வெய்யிலிலும் புழுதிக்காற்றிலும் அடிபட்ட மரம் செடி கொடிகளைத் தவிர வேறொன்றும் தென்படவில்லை. என்னில் எழுந்த வியப்பு குடைச்சலாக மாறிற்று. எனவே, கீழே இறங்கி நேரே பங்களாவுக்குள் புகுந்தேன். வலது பக்கத்தில் ஒரு குடிசையும், அதை ஒட்டி இரண்டு திண்ணைகளும் இருந்தன. திண்ணையை ஒட்டி, சிவப்புப் பேப்பர்ப் பூ காய்க்கிற கொடி, முன்பக்கப் பந்தலில் படர்ந்து கிடந்தது. டைமண்ட் தட்டிக்கருகில், ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும், சினிமா ரீல் மாதிரி பாட்டு அறுந்து விட்டது.‘ பாடினவள் இந்தப் பெண்தானா?’ வண்டு எங்கே? இது அவன் குடிசை அல்லவா ? அவனுக்குத்தான் கலியாணமாகவில்லையே, இந்தப் பெண் யார்? அவளிடத்தில் போய்க் கேட்பது சரியல்ல என்று திரும்பிவந்து விட்டேன்.

அன்றிரவு எங்கள் வீட்டுச் செய்தித்தாள் ஒரு சமாசாரத்தைக் கொண்டு வந்தது—செய்தித்தாள் என்றால், என்னுடைய ஒன்பது வயதுப் பேத்திதான் !

*இரவில் பூக்கும் வாசனை மிகுந்த ஒரு மலர்.

'தாத்தா, உன்னை ஒண்ணு கேக்கறேன், சொல்லுவியர் ?'

'கேளு, சொல்லுகிறேன் .'

'தோட்டத்தில் யார் வந்திருக்கா ?'

'ஒரு பெண் வந்திருக்கு.'

'பொண் இன்னுப் போதுமா? வேலைக்காரப் பொண்ணு பள்ளிக்கூடத்துப் பொண்ணு, எல்லாரும் பொண்ணுதான். என்ன பொண்ணு, சொல்லு.'

'எனக்குப் புதிரவிழ்க்கத் தெரியாதே.'

'தோத்துப்போயிட்டேன்னு சொல்லு.'

'ஆமாம், தோற்றுப்போய் விட்டேன்.'

'அந்தப் பொண்ணு, கல்யாணப் பொண்ணு, தெரிஞ்சுக்கோ.'

'கல்யாணப் பெண்ணு?'

'ஆமாங்கறேனே! நம்ப வண்டு இல்லே, வண்டு, அவன் பொண்டாட்டி.'

நான் வியப்பில் ஆழ்ந்து விட்டேன். 'காதும் காதும் வைத்தாற்போல' என்பார்களே, அது மாதிரி அல்லவா இருக்கிறது ! கழைக்கூத்தாடி போடுகிற மாங்கொட்டையிலிருந்து செடி முளைத்து, காய் வருமே, அதுபோலல்லவா இருக்கிறது, சினிமாக் காட்சி மாதிரி அல்லவா இருக்கிறது. என்னிடம் ஒரு வார்த்தைகூட அந்த வண்டு சொல்லவில்லையே! ஆனல், இந்த நாளில் சீர்திருத்தக் கல்யாணம், கண்டதும் காதல் கல்யாணம், பதிவுத் திருமணம் என்று என்னென்னவோ சொல்கிறார்களே—அந்த மாதிரி இருக்குமோ என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

'என்ன தாத்தா, அவ்வளவு தெரிஞ்சால் போதுமா ? அவ யாரு, தெரிய வேணுமா ?'

' யாரு-அதையும்தான் சொல்லேன் !'

' பங்களாவுக்கு அடுத்த குடிசையிலே ஒரு பொண்ணும் கிழவியும் இருந்துதே ?'

' ஆமாம்.'

' அந்தப் பொண்ணேதான் இவ, தெரிஞ்சுதா ?' என்று சொல்லிவிட்டு, என் பேத்தி ஓடிப் போய்விட்டாள். இரண்டு நாளைக்குப் பின் அந்தப் பெண் எங்கள் வீட்டுக்கு வந்தாள்.

அவளைப் பிரமாத அழகியென்று சொல்வதற்கில்லை. தோட்டக்காரன் பெண்சாதிதானே என்ற விளக்கம் பொருத்தமானதுதான். ஆனால், அவளைப் பார்த்தால் அப்படிச் சொல்ல முடியாது. நாலடி இரண்டங்குலம்தான் உயரம் என்றாலும், தோற்றத்தில் ஒரு மிடுக்கு இருந்தது. முதலில் என் கண்ணில் பட்டது, அவளுடைய 'ரிங்' கொண்டை. அதற்குமேல் கவிழ்த்த படகைப்போல் பூச்சரம் ! புடவை கட்டியிருந்த மோஸ்தரும், சோளியும் நவநாசூக்கின் முன்னணியாக மினுக்கின. கடைக்கண் ஓரத்திலிருந்து காதுவரையில் மை இழுத்துவிடப் பட்டிருந்தது. சுருங்கச் சொன்னால், சினிமா 'எக்ஸ்ட்ரா' மாதிரி இருந்தது.

' நம்ம வண்டைக் கட்டிக்கிட்டியா ?' என்று கேட்டேன்.

அவள் ஆள்காட்டி விரலை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டாள்.

'அதில்லிங்களே அவர் பெயரு. ''நான்பெற்றமலர்'' லே வருதே, அந்தப் பெயரில்ல ?'

அதென்ன படமென்று எனக்குத் தெரியாமல் விழித்தேன். என் பேத்தி கை கொடுத்தாள்.

'உனக்குத்தான் ஒண்ணுமே தெரியாதே. 'மலர்க்கிள்ளின்னு பேர் ' என்றாள்.

'ஆமாங்க, அதான்' என்று அந்தப் பெண் ஊர்ஜிதம் செய்தாள்.

'அப்பொழுது, உன் பெயர் ?'

'பஞ்சவர்ணமுங்க.'

'வண்டு நல்ல பிள்ளை. சந்தோஷமாக இரு' என்று வாழ்த்துக் கூறிவிட்டு, ஓட்டுக்குள் ஆமை சுருங்குவது போல என் அறைக்குள் போய்விட்டேன்.

கண்ணில்லாதபோது காது வேலைசெய்ய வேண்டிய தென்று இயற்கையின் கட்டளையோ, என்னவோ ! என் அறைக்குள் இருந்த போதிலும், கூடத்தில் பேசுவது நன்றாகக் காதில் விழுந்தது.

'சரோ ! அம்மா கிட்டபோய், கொஞ்சம் கொளம்பு வேணுமுன்னு நான் கேட்டேன்னு சொல்லு' என்றாள், பஞ்சவர்ணம். பதில் சொல்ல என் மனைவியே கூடத்துக்கு வந்துவிட்டாள். 'குழம்பா வேணும் ? தரேன். ஏன், சமைக்கவில்லையா ?'

தலைவலியா இருந்துச்சு. சோறுமாத்திரம் வடிச்சேன். இவுரை குளம்புவை இன்னேன். வெக்கறேன்னுட்டாரு.

'எனக்கு எல்லாம் தெரியும்டி. இப்பவெல்லாம் சோறு தண்ணி ஒண்ணுமே பிடிக்காது' என்று என் மனைவி சொல்லிச் சிரித்தது காதில் விழுந்தது.

2

அதற்குப் பிறகு ஒரு நாள் வண்டைப் பார்த்தேன்.

'என்னப்பா, ரகசியமாகக் கல்யாணம் செய்துகொண்டு விட்டாயே !'

வண்டு சிரித்துக்கொண்டே தலையைச் சொறிந்து கொண்டான்.

'அடுத்த ஊட்டுலே கிழவி இருக்குதே, அது எங்க ஆயாகிட்டெ தொந்தரவு பண்ணிச்சாம். சொன்ன ஏழா நாளுக்குள்ளார கலியாணம் ஆயிடுச்சுங்க !'

'ஆ௵, உனக்கு ஆயா இருக்குதா ?'

'இருக்குதே-அக்கா ஊட்டோடு இருக்குது. முந்தியே சொல்லலீங்களா ?'

'நினைப்பில்லே. சரிதான். நீ பெயரை மாற்றிக்கொண்டு விட்டாயாமே, உன் சம்சாரம் சொன்னாள்.'

'ஆமாங்க. கலியாணப் பத்திரிகைன்னு போட்டாங்க. இது பேரைமாத்திப் போட்டுடச் சொல்லிச்சாம்.'

'படுசுட்டி போலிருக்கிறது. உம்...வண்டு என்று அவள் எதிரில் இனிமேல் கூப்பிட முடியாது.'

'ஆமாங்க. அவளுக்கு ஒரே சினிமாப் பயித்தியமுங்க. எதுனாச்சும் சினிமாப் பாட்டை மொணவிக்கிட்டே கிடக்குது.'

'அப்படியா ?'

'ஒருநாள் சோத்தையே காந்த வச்சூட்டா. சோறு எள்ளும் அரிசியும் கலந்தாப்போல ஆயிடுச்சு. இதென்னுன்னு கேட்டேன். ஏதோ பராக்கிலே இப்படிப் போயிடுச்சு இன்னு'

'சின்னப் பெண்தானே !'

'ஒரு நாள் மாத்தி ஒருநாள் சினிமாவுக்குப் போகணும்றதுங்க. என் பொளப்பு அதுக்குப் புரியல்லே கலியாணத்திலே மோதரப்பணம் கெடச்சுதுங்க. அதைக் குடுத்துக்கிட்டிருக்கேன். இருக்கிறவரையில் குடுத்துடறேனுங்க. அப்புறம் ?'

'நாளையைப் பற்றி இன்னிக்கு என்ன வந்தது ? சந்தோஷமாய் இருங்கள்' என்று உபதேசம் செய்தேன்.

வண்டு 'சொன்னதற்கும் பஞ்சவர்ணத்திற்கும் பொருத்தமாகத்தான் இருந்தது. நாளை விஷயம் இன்றைக் கேன் என்று உபதேசம் செய்துவிட்டேனே ஒழிய நாளைய ரகசியம் இன்றில்தான் இருக்கிறதென்பதை நான் உணரா தவனல்ல. புருஷன் தோட்டக்காரன் என்பதை அந்தப் பெண் தன் மனத்தில் ஊன்றிக் கொள்ளவில்லையே என்று கவலையாக இருந்தது.

கல்யாணமாகாதபோது வண்டு செட்டும் கட்டுமாகத் தான் இருந்தான். அவன் சினிமாவுக்கு அதிகமாய்ப் போய் நான் கண்டதில்லை. சினிமாவின்மீது அவனுக்கு வெறுப்புக் கிடையாது; ஆனால், அவன் வாங்கின சம்பளத் திற்கு இருந்தது. பொருளாதாரம் என்ற தத்துவத்தைப் பற்றி அவனுக்கு ஒன்றும் தெரியாது. வரவுக்குமேல் செலவு செய்யக் கூடாதென்ற பாடம் மட்டும் அவனுக்கு உடன் பிறப்பாக இருந்தது. தான் தோட்டக்காரன் என்ற மண்டலத்திற்குமேல் அவன் மனம் பறக்கவில்லை. எனவே, கூண்டுக்கிளியைப்போல், சிறகை நீட்டாமல், பொழுதுபோக்கிக் கொண்டிருந்தான். இப்பொழுது கிளிக் கூண்டின் வாசல் கதவைத் திறக்க ஒரு பூனை முயன்று கொண்டிருந்தது. எனக்குக் கவலையாகவே இருந்தது.

3

வீட்டுக்குப் பஞ்சவர்ணம் வந்துவிட்டாள் என்பதற் காக வண்டு தன் வழக்கங்களை மாற்றிக் கொள்ளவில்லை. அதிகாலையில் எழுந்திருந்து தோட்டத்தில் பாத்திகளைக் கொத்துவது, சரகு அரித்துச் சுத்தம் செய்வது ஆகிய ஒரு வேலையையும் குறைக்கவில்லை.

வழக்கம்போல் பாத்திக்குத் தண்ணீர் கட்டிக் கொண் டிருந்தபொழுது, பஞ்சவர்ணம் தோட்டத்திற்கு வந்தாள். தோட்டவேலை கற்றுக்கொடு' என்று வண்டைக் கேட்ட

பொழுது, அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. இதென்ன பெரிய காலேஜ் படிப்பா என்று சொல்லிக்கொண்டே விவரங்களை அவளுக்குக் கூறினான். அதுமுதல் மண்வெட்டி பிடித்துக் கொத்துவது, அரிவாளால் வெட்டுவது ஆகியவை தவிர, பாக்கி தோட்டத்து வேலைகளில் பஞ்சவர்ணம் ஈடுபடலானாள். தோட்டவேலை முடிந்தபிறகு, சமைய லுக்குப் போய் விடுவாள். ஆனால் சமையலில் அவளுக் கொன்றும் தேர்ச்சியைக் காணோம். எப்படியோ சாதம் வடித்துவிடுவாள். குழம்பு வைப்பதென்றால், ஆற்றங்கரை யைத் தாண்டமுடியாமல் நிற்கும் மண்குதிரையாகி விடு வாள். சிலநாள் வண்டு வைப்பான். அவனுக்கும் அலுப்பு சலிப்பாக இருக்கும்பொழுது, என் மனைவியைக் கேட்டு பஞ்சவர்ணம் வாங்கிச் செல்வாள். சமையலில் தனக்கு உதவி செய்கிறான் என்ற நினைவு எழவேண்டியதிருக்க, வண் டுக்கு சமையலில் பழக்கம் இருந்தது அவளுக்கு ஏனோ பிடிக்கவில்லை.

புதுவாழ்வு தேன் நிலவாக ஓடவில்லை. பூ வைத்துக் கொள்ளவும் சினிமாவுக்குப் போகவும் தவறக்கூடாது என்ற வெறி, பஞ்சவர்ணத்திடம் இருந்தது. எப்படியோ வெறியைத் தணிக்க வேண்டுமென்று வண்டு முயன்றுவந் தான். தணிந்தால்தானே !

எரிந்து அடங்கட்டும் என்று நினைத்துக் கொண்டான். வெறி அடங்குவதற்கு முன் அவன் கையில் இருந்த பணம் அடங்க ஆரம்பித்து விட்டது. தினம் பூ வாங்குவது மாறி. இரண்டு மூன்று நாள் தள்ளி வாங்குவதென்று ஏற்பட்டது. அதற்குப் பிறகு ஐந்தாறு நாள் தள்ளிக் கடனுக்கு வாங்க வேண்டிய நிலை உண்டாகி விட்டது.

பஞ்சவர்ணம் தோட்ட வேலைக்கு உதவி செய்ய வரு வதும் போவதும் இதற்கிணங்க மாற ஆரம்பித்தது. சாகிற வரையில் தோட்டக்காரனாகவே இருந்து சாகணும் என்று நினைப்பார் போல் இருக்கிறதே என்ற எண்ணம்

பஞ்சவர்ணத்தின் மனத்தில் உறுத்திற்று. 'இந்தப் பிச்சைக் கார சம்பளத்தை நம்பிக் கிழவி தள்ளி விட்டாளே' என்று, ஏங்கினாள்.

ஒரு நாள் தோட்ட வேலையைப் பாதியில் விட்டு விட்டு வண்டு குடிசைக்கு வந்தான். பஞ்சவர்ணம் ஊக்கமின்றித் திண்ணையில் உட்கார்ந்திருந்தாள்.

'ஒரு நல்ல சமாசாரமில்ல' என்றான்.

'சொல்லேன்.'

'நீ வந்த வேளைன்னு இந்த மாசத்தெ புடுச்சு ஏழு ரூவா சம்பளம் கூட்டித்தரேன்னு மொதலாளி ஐயா இப்போ எங்கிட்ட சொன்னாரு.'

'இந்தச் சம்பளம் வாங்க சாக்குத்தான் தயார் செய்ய ணும்.'

'அப்பொ, இதை வேணாமின்னா சொல்லச் சொல்றியா ?'

'நான் ஏன் சொல்றேன் ? வேற நல்ல வேலையாப் பாக்கக் கூடாது ? அந்தத் தெரு முருகப்பிள்ளை இருக்கிறாரு. 75 ரூவா சம்பளம். குஷியா இருக்காங்க.'

'என்ன வேலை ?'

'சினிமாவிலே.'

'எனக்கு யாரையும் தெரியாதே.'

'மண்ணுளிப் பாம்பு மாதிரி தோட்டத்திலே நெளியத் தெரிஞ்சாப் போதாதா ? ஒரே தரித்திரம் புடுங்குது ! இந்தச் சம்பளம் ஒசந்தால் நிமிந்துடும்.'

அதற்கு மேல் வண்டுக்கு அவளோடு பேசுவதற்குத் தெரியவில்லை. விருக்கென்று திரும்பிப் போய்விட்டான்.

அந்த வாரத்தோடு வண்டின் கை சுத்தமாக வறண்டு போய் விட்டது. பஞ்சவர்ணம் கடனுக்குப் பூ வாங்குகிற கட்டமும் தாண்டியாகி விட்டது. பூக்காரன் கடன் கொடுக்க மறுத்தான்.

மறுநாள் வண்டு தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தான். எதிர்பாராமல் பஞ்சவர்ணம் உதவி செய்ய வந்தது அவனுக்கு ஆச்சர்யமாயிருந்தது.

ஆனால் அன்று சாயங்காலம்தான் அவனுக்கு விஷயம் விளங்கிற்று. பஞ்சவர்ணம் வழக்கம் போல் 'ரிங்' கொண்டை போட்டுக் கொண்டிருந்தாள். அதற்கு மேல், கவிழ்ந்த பிறை போல் தொடுத்த 'நைட் குவீன்' மலர்ச்சரம் காட்சி தந்தது.

'இது ஏது ?'

'ஏன், தோட்டத்துப் பூதான். பூ வாங்கத்தான் காசில்லாமல் போயிட்டுதே.'

'உன் கிட்டெ—சொல்லணுமா ?'

'இந்த ஊட்டுக்கார அம்மா சங்கதி உனக்குத் தெரியாது. அந்தச் செடியிலே இருக்கிற அல்வளவு பூவையும் எண்ணி வச்சிருப்பாங்க. ஒன்னைப் பாத்தூட்டா, அப்புறம் நான் இங்கே வேலை பார்க்க முடியாது. அவ்வளவு கண்டிப்பு. அசட்டுத்தனமா—'

'நல்ல வேலை, என்னாலே போக வேணும்' என்று கூறிக் கொண்டே, தலையில் இருந்த பூவை எடுத்து, பஞ்சவர்ணம் எறிந்தாள். வண்டு பதைத்துப் போய் விட்டான். ஆனால், வாயைத் திறக்கவில்லை. தாயார் அவசரப்பட்டுச் செய்த காரியம், அவனை என்ன கதிக்கு ஆளாக்கிவிட்டது ? தோட்டத்திலே கேள்வி முறை இல்லாமல் அடிக்கும் காற்றைப் போல் இருந்தவனை, கட்டிப்போட்ட சரகு மூட்டையாக்கி விட்டாளே ! நான் மண்ணிலே இருக்

கிறேன். இவள் மேகத்தில் இருக்கிறளே ! குடித்தனப் பாங்கு என்று இருக்கிறதென்பது தெரியவில்லையே !...

4

அடுத்த நாள் காலையில் பஞ்சவர்ணம் படுக்கையை விட்டு எழுந்திருக்கவில்லை. துப்பட்டியை இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்திருந்தாள். தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பிய வண்டு, குடிசைக்கு வந்ததும் திகைப்படைந்தான். பஞ்சவர்ணம் இரண்டு பொட்டிலும் சுண்ணும்பைத் தடவிக் கொண்டிருந்தாள்.

'உடம்புக் கென்ன ?'

'சந்தோசம் சாஸ்தியாப் போய் காச்சல் வந்திருக்கு'

அவன் அவள் உடலைத் தொட்டுப் பார்த்தான். அதிகப்படியான சூடொன்றும் இல்லை. 'சூடில்லாமல் சுரம் இருக்குமா ? ஏன் இருக்கக்கூடாது ? பனைமரமென்றல் எல்லாமா காய்க்குது ? ஆண் பனையில்லை—காய்க்காமல் ? அந்த மாதிரி சூடில்லாத சுரமாக இருந்தால் ?'

'ஆஸ்பத்திரிக்குப் போவோமா ?'

'இந்தத் தோட்டத்துக் காத்துக்கே எல்லாம் சரியாயிடும்.'

அவள் பேச்சில் கிண்டல் இருந்தது. ஆனல், அவளுடன் சண்டை பிடிக்க அவனுக்கு இஷ்டமில்லை, முடியவுமில்லை. பூப்பறித்து எடுத்துக் கொண்டதைக் கண்டித்ததற்கும் சுரத்திற்கும் சம்பந்தம் இருக்குமோ என்ற நினைப்பு எழுந்தது; படுக்காங்குளி மாட்டின் வாலை முறுக்கிக் கிளப்புவதைப் பார்த்திருக்கிறன். எழுந்திருக்காத மாட்டு வால் பக்கம் வைக்கோலைப் போட்டுக் கொளுத்துவதையும் பார்த்திருக்கிறன். அந்த எண்ணம் தோன்றிற்றே ஒழிய,

அவன் தன்னை அடக்கிக் கொண்டான். அன்று அவனே சோறு சமைத்தான். இழுத்துப் போர்த்திய துப்பட்டி அன்று முழுதும் எடுபடவில்லை. சக்கரம் நீண்ட நாள் ஓடா தென்று அவன் மனத்தில் பட்டுவிட்டது.

பஞ்சவர்ணத்தின் கசப்பும் முற்றித்தான் போயிருந்தது. 'பூ வாங்கக் காசு கிடையாது. கடனும் வாங்கக் கூடாது. வீட்டுக்கார அம்மாவோ பூவை எண்ணி வைத் திருக்கிறாள். இவர் முப்பத்தி ஐந்து ரூபாயை எண்ணுகிறார். இந்த மண்ணுளிப் பாம்போடு பாக்கி நாளை எப்படித் தள்ள முடியும்? தலைக்கு வேண்டாம். கண்ணுக்கும் காதுக்கும் கூட இல்லாமல் போனால் புருசன்—பெண்சாதி என்ன வேண்டிக் கிடக்கிறது. நகை கேட்கிறேனா? இரண்டு நாளைக்கு ஒரு தரம் நாலணாக் காசு! அதுக்குக்கூடத் தரித் திரம் என்றால்—பெண்சாதி என்றால் வயிறு என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறார். பெண் பிள்ளை என்றால் ஆடு மாடுதானா—வயிற்றோடு சரி என்பதற்கு? இப்பொழுதே இப்படி என்றால், பாக்கி நாள்?'

5

எத்தனை நாள் துப்பட்டியைப் போர்த்திக் கொண்டு படுத்திருக்க முடியும்? கண்ணை மூடிக் கொண்டால் மன்னர் களும் அழகிகளும், லட்சியப் பெண்களும், 'வில்லன்'களும் தாறுமாறாக மனத்திரையில் கூத்தடிக்கிறார்கள். காற்றை வெட்டுகிறது வாள். ஆனால், தலை உருளுகிறது. மழை கொட்டி மின்னல் மின்சாரத்தை அணைக்கிறது. மலர்கள் பாடுகின்றன. பட்சிகள் பேசுகின்றன. சம்பாஷணைப் புயல் அடிக்கிறது. கண்ணை மூடிக்கொண்டு படுக்க முடியவில்லை. துப்பட்டியை பஞ்சவர்ணம் எடுத்தெறிந்து விட்டு, வெந் நீரில் குளித்ததோடு சுரம் ஓடி விட்டது.

வழக்கம்போல் பஞ்சவர்ணம் சோறு சமைத்தாள். இப்பொழுது குழம்பு கூடக் காய்ச்சத் தெரிந்துவிட்டபடி

யால், குழம்பையும் வைத்தாள். ஆனுல், வழக்கம் போலப் போட்டுக் கொள்ளும் 'ரிங்' கொண்டையைப் போட்டுக் கொள்ளாமல் குதிரை வால் மாதிரி கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருந்தாள். பட்டணத்தில் குதிரை வால் பின்னல் சகஜம்தான் என்று வண்டுக்குத் தெரியும். ஆனுல், பஞ்சவர்ணம் அந்தக் காரியத்தைச் செய்திருந்தது 'பூச் செலவைக் குறைத்து விட்டேன்' என்று பரிகாசம் பண்ணுவது போல் அவனுக்குப் பட்டது.

'தலே காயட்டுமின்னு இந்தச் சடை போட்டுக் கிட்டியா' என்ருன்.

'செலவில்லாமே அழகா இருக்கலாமுன்னு பார்க் கறேன்.'

அவன் இந்தக் கிண்டலைத் தொடர்ந்தான். 'என்னைக் கருமின்னு நெனைச்சுக்கிட்டிருக்கே!'

'நல்லா இருக்கு! கர்ண மகாராஜாவைக் கருமின்னு சொல்வேனு?'

அதற்குப் பிறகு அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்டாள்.

பகலுக்கு எடுத்தது சத்தமும் முரண்பாடும், இரவுக்கு எடுத்தது இணைப்பும் அமைதியும் என்பது அனுபவம். அந்த அனுபவம் வண்டுக்குக் கிட்டவில்லே, இரவு வந்தது. ஆனுல், பஞ்சவர்ணம் தளர்ந்ததற்கான அறிகுறியைக் காணேம்.

அடுத்த நாள் மாலே மூன்று மணிக்கு சினிமாவுக்குப் போகலாம் என்று தன்னைக் கேட்டதும், பஞ்சவர்ணம் தளர்ந்து விட்டாள் என்ற நம்பிக்கை வண்டுக்கு உண்டா யிற்று. தன்னை எதிர்பார்க்கிருள் என்பதே தனக்கு வெற்றி என்று நினைத்தான். ஆனுல், அந்த நம்பிக்கையை வேரூன்றச் செய்யும் வசதி அவனிடம் அடியோடு இல்லே.

'ஒண்ணுந் தேதி ரெண்டு பேருமாகப் போவோம் சம்பளம் வந்தூடும்.'

அவன் பதிலளித்ததற்கு மேல் அவள் எதுவுமே சொல்ல வில்லை. அவளுடைய மௌனம் பயங்கரமாக இருந்தது. கடன் வாங்குவது என்பதும் அதைவிடப் பயங்கரமாக இருந்தது. உடனே அவன் தோட்டத்திற்குள் போய்ப் புகுந்து கொண்டான். சிறிது நேரம் தோட்டத்தில் வேலை செய்தான். பிறகு சில பாத்திகளுக்கு சீமை உரம் தேவைப் பட்டது நினைவுக்கு வந்தது. எரு வாங்குவதற்காக வெளியே கிளம்பினான். போகும்பொழுது பஞ்சவர்ணத்திடம் சொல்லிவிட்டுத்தான் கிளம்பினான். ஆனால், அவள் அப் பொழுதும் சுவரைப் போல் அசையாமல்தான் இருந்தாள்.

6

கடைக்குப் போன வண்டு இரவு ஏழு மணிக்குப் பங்களாவுக்குத் திரும்பினான். குடிசை சாத்தியிருந்தது. உள்ளே விளக்கின் வெளிச்சத்தையும் காணோம். சற்று வியப்புடன் கதவைத் திறந்து உள்ளே போனான் பஞ்சவர்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. விளக்கை ஏற்றிப் பார்த்தால் மட்டும், இல்லாத பொருள் உற்பத்தி ஆகிவிடுமா? ஒரு வேளை தாயார் வீட்டுக்குப் போயிருக்க லாம் என்று நினைத்து, பங்களாவை அடுத்த குடிசைக்குப் போனான்.

மாமியார்க் கிழவி வட்டிலிலிருந்து குழம்புச்சோற்றைத் தின்று கொண்டிருந்தாள். வேறு யாருமில்லை. 'பஞ்சவர்ணம் இங்கே வரல்லியா?' என்றான்.

'வரல்லியே. அடுத்த ஊட்டுலேதானே இருக்கேன் இருந்தும் அவளைப் பார்த்தே ஒரு வாரமாச்சு.'

'எங்கே போயிருக்கும்? ஒரே பயித்தியமா இருக்குது தோட்டத்து வண்ணாத்திப் பூச்சி கணக்கா பறக்கப் பாக்குது. நான் மண்ணுளிப் பாம்பாக் கிடக்கிறேன்.'

'அங்கேயும் ஆரம்பிச்சுட்டுதா?'

'எனக்கு என்ன தெரியுது? எங்கே போயிடுச்சுன்னு பார்க்கிறேன்.'

மாமியாரின் குடிசையை விட்டிறங்கி என்னை நோக்கி வண்டு வந்தான்.

வந்ததும் வராததுமாக 'பஞ்சவர்ணம் வந்தாளா' என்று கேட்டதும் எனக்குத் திடுக்கிட்டது.

'வரவில்லையே' என்று சொன்னவுடன் நேரே பங்களாவுக்குத் திரும்பிப் போய் விட்டான். அந்த நேரத்தில் வந்து இந்த மாதிரிக் கேட்கவேண்டிய அவசியம் என்ன? ஒரு கால்—? ஆனல், ஊகிப்பதென்றாலும் ஒரளவாவது ஆதாரம் வேண்டாமா? எந்த ஆதாரத்தைக் கொண்டு என்னவென்று நினைப்பது? ஆனல், மனது மட்டும் ஏனோ சஞ்சலப்பட்டது.

7

மறுநாள் உத்தியோக ஜோலியாக வெளியூருக்குப் போய் விட்டேன். இரண்டு நாளுக்குப் பிறகு ஊருக்குத் திரும்பியவுடன், இந்த ஞாபகமே தலை நீட்டிற்று. என் மனைவியை விசாரித்தேன். அவள் சொன்னாள்:—'அதை என்ன சொல்றது? அது வெறும் தத்தாரிபோல் இருக்கிறது இரண்டு நாளாக ஒரே கலாட்டா. கால் ரூபாய் காசுக்கு விதியில்லாதவனோடெ என்ன வாழ்ந்து குப்பை கொட்றதுன்னு போயிட்டா? யார் யாரோ பஞ்சாயத்து பேசிப் பார்த்தா. பஞ்சவர்ணத்தின் தாயார்க்காரிகூடச் சொல்லிப்பார்த்தூட்டா. அவ மசியல்லே.'

'அப்புறம்?'

'அப்புறமென்ன? வண்டு இருக்கிறுன் தோட்டம் இருக்கிறது. மண்வெட்டி இருக்கிறது. அவ்வளவுதான்.'

'அது சரி. இப்பொ அவள் எங்கே?'

அந்தக் கூத்துத்தான் வேடிக்கையாய் இருக்கிறது. பங்களாவுக்கு வடபுறத்து குடிசையிலே ஒரு சாமியார் இல்லே?'

'யாரு? முட்டிக்குக் கீழே ஒரு காலில்லாமல் இருக்கிறுனே?'

'அவனேதான். அவன் வீட்டிலே இருக்கிறுள்.'

'அம்மா வீட்டுக்குப் போகல்லியா?'

'வரமாட்டேன்னுட்டாளாம்.'

'சாமியார் வீட்டிலே இவளுக்கு என்ன வேலே?'

'வீட்டுக்குள்ளே நடக்கிறது நமக்கு எப்படித் தெரியும்?' என்று கோணலான ஒரு கேள்வியுடன் நகர்ந்துவிட்டாள்.

எனக்கு ஆச்சரியமாயிருந்ததென்று சொல்ல முடியாது. வண்டின் கல்யாணம் என்னேப் பொறுத்தவரையில் சினிமா மாதிரி இருந்தது. ஆகையால், எதையும் எப்பொழுதும் எதிர்பார்க்கத் தயாராக இருந்தேன். எனவே, இப்பொழுது வியப்பொன்றும் தோன்றவில்லே. வண்டைப் பார்க்கவேண்டும் என்று மட்டும் உறுத்திற்று.

மறுநாள் காலே வழக்கத்துக்கு விரோதமாகத் திண்ணேயில் போய் உட்கார்ந்து கொண்டேனே ஒழிய, பங்களாவுக்குள் வலியச் சென்று இதைப் பற்றிக் கேட்பது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லே. நல்லவேளேயாக வண்டு தென்பட்டான். தாளுக வருவான் என்று எதிர்பார்த்தேன். ஆனல் வரவில்லே, என்ன இருந்தாலும் தாளுகச் சொல்லி

கொள்ள வெட்கமாகத்தானே இருக்கும்! அதற்காகக் கூப்பிட்டவுடன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வரவில்லை. என்றும்போல் தெளிவாகவே வந்தான்.

'நான் ஊரில் இல்லை. அம்மா என்னவோ சொன்னுங்க' என்றேன்.

'அன்னிக்கு பஞ்சவர்ணம் வரல்லியான்னு கேட்டே னில்லே? அப்பொ இவளை வீட்டிலே காணல்லே. ஆயா வீட்டிலேயும் காணும். இது வந்த நாளா கருடன் கணக்கா மேலேயே பறந்துகிட்டு இருந்துச்சு. நான்தான் தவிட்டுக் குருவியாச்சே. இதுக்கு சோக்கா இருக்கணு மின்னு ஆசை.

'என் பொளைப்பிலே எங்கே இருந்து சோக்குமுளைக்கும்? நல்ல பேச்சாவே மொதல்லே சொல்லிக்கிட்டு வந்தேன். இது ஒண்ணும் ஏத்துக்கல்லே. அப்பறம் காச்சலுன்னு ரெண்டு நாள் பொய்யாப் படுத்துக்கிட்டுது. அப்பவும் சண்டை போடல்லே, நான் ஒங்களைக் கேட்டேனே அன்னிக்கு, சினிமாவுக்குப் போவோம்னுச்சு. காசில்லே, சம்பளம் வாங்கி ஆவட்டும் இன்னேன். அப்பறம் கடைத் தெருவுக்குப் போயிட்டேன். திரும்பிவந்து பாத்தா, ஆளைக் காணும். ஆயா வீட்டிலேயும் காணும்.

'நான் எங்கேன்னு தேடறது? சரிதான் போன்னூட்டு சோத்தைத் தின்னேன். படுத்துக்கிட்டேன். மணி எட்டாச்சு, ஒம்பதாச்சு, பத்தாச்சு; ஆளைக் காணும். அப்பொ திடீருன்னு மழை பிடிச்சுக்கிட்டுதா? தூக்கம் வரல்லே. குடிசைக் கதவைத் திறந்துக்கிட்டு திண்ணையிலே வந்து குந்தினேன். 'ஓ'ன்னு மழை பேஞ்சுகிட்டிருந்துச்சு. செத்தே நேரத்துக்கெல்லாம் பளிச் பளிச்சின்னு மின்னல் அடிச்சுது. அந்த மழையிலே நனைஞ்சுக்கிட்டு பஞ்சவர்ணம் வந்தா. எனக்கு கண்மண் தெரியாத கோவம். 'எங்கே போயிருந்தே' இன்னேன். 'சினிமாப் பார்க்க' இன்னு.

'ஒண்டியாவா ?'

'அடுத்த தெரு ராமாயிகூட.'

'காசுதான் இல்லேன்னேனே ?'

'நான் சாமியார்கிட்டே வாங்கினேன்.'

'அந்த நொண்டி கிட்டெயா ?'

'காலிருக்கிறவங்க கிட்டெத்தான் காசில்லியே !'

'இனுமாவா ?'

இந்தக் கேள்வி கேட்டவுடனே என்னே மொறச்சுப் பாத்தூட்டுச் சொன்ஞ, 'பெண்டாட்டியா எஞம் கொடுக்க? கடன் தான் வாங்கினேன்.'

எனக்குக் கோபம் அதிகமாயிட்டுது. 'கடன் கட்டு சமாசாரமே வேணுமுன்னு ஆதிலேருந்து அடிச்சுக்கிட்டிருக்கேனே.'

'அடிச்சுக்கிட்டுத்தான் கிடக்கறே. என்னிக்கும் நீ அடிச்சுக்கிட்டுக் கிடக்கற ஆளாத்தான் இருப்பே' அப்படீன்னு அவ பதில் சொன்ஞ.

'எனக்கு எப்படி இருக்கும், யோசிச்சுப் பாருங்க. அப்படியா சேதி—சொன்ன பேச்சுக்கு அடங்கறவ இல்லே நீ? அப்பொ சரிதான். இங்கே உனக்கு வேலே இல்லே, சாமியார் கிட்டெயே போயிடு' இன்னு சொல்லிட்டேன்.

'ஒரு நிமிஷம் என்னே முழிச்சுப் பாத்தா, பொம்பிள்ளேக்கு ஆம்பிளே தோத்தவஞ? நானும் முறைச்சேன்!'

'போக மாட்டேன்னு நெனேக்கிறியா ?' இன்னு சொல்லிக்கிட்டே, அந்த அடை மழையிலே போயிட்டா. வந்த ஆங்காரத்திலே கதவை மூடிக்கிட்டு உள்ளே வந்து படுத்துட்டேன்.

மறுநாள் கருக்கல்லே மாமியாரிட்டப் போய் நடந்ததை யெல்லாம் சொன்னேன். உடனே கிழவி சாமி யார் வீட்டுக்குப் போய்ப் பாத்தா. அங்கே இவ இருந் தாளாம். இவுங்களுக்குள்ளே என்ன பேச்சுவார்த்தை நடந்துதோ, எனக்குத் தெரியாது. இனிமே என்கிட்டெ குப்பை கொட்ட வரமாட்டேன்னு கண்டிப்பா சொல் லிடுச்சாம். அதுக்கப்பறம் போய் எங்க ஆயாகிட்டே சொன்னேன். அவ ஆத்திரப்பட்டுக்கிட்டு, யார் யாரோ பஞ்சாயத்தை யெல்லாம் கூட்டியாந்து சாமியார் ஊட் டுலே பேசினுங்க. கல்லுப்பிள்ளையாராய் அது இருக்குது. 'பாவம்! சாமியாரு என்ன பண்ணுவாரு?' இன்னு பஞ்சா யத்துக்காரங்களெல்லாம் போயிட்டாங்க. இப்பொ அது சாமியாரோடெ இருக்குது. நான் மண்வெட்டியோட இருக்கறேன்' என்று சொல்லி முடித்தான்.

காட்டாற்றில் வெள்ளம் வந்த கதையாய் இருந்தது. கலியாணம் ஆனதும் கலைந்ததும். இருந்தாலும் சாமி யாரைப் பார்க்கவேண்டும் போல் தோன்றிற்று.

ஒரு வாரம் வரையில் சாமியாரைப் பார்க்க முடிய வில்லை. இதற்கிடையில் இரண்டொரு நாள் பஞ்ச வர்ணத்தைப் பார்த்தேன். சாயங்காலமாக யாரோ பெண்களோடு சினிமாவுக்குப் போகிற மோஸ்தரில் சென்று கொண்டிருந்தாள். என்னைப் பார்த்து அசட்டுச் சிரிப்புச் சிரித்தாள். ஆனால் பேசவில்லை.

8

மறு ஞாயிற்றுக்கிழமை அந்தச் சாமியார் எங்கள் தெருவோடு போனான். அவனை எனக்கு நன்றாகத் தெரி யும், ஒண்டிக்கட்டை. ஏற்றுமதிக் கிடங்கிலே ஏதோ கணக் குப்பிள்ளை உத்யோகம், கூப்பிட்டேன். வீட்டுக்குள்ளே வந்தான். 'என்ன சாமியாரே! கண்ணிலேயே காணோமே' என்றேன்.

'காணுமெ என்னங்க? நீங்க எதுக்குக் கூப்பிட்டீங்கன்னு தெரியும். நீங்க தெரிஞ்சுக்கறதும் நல்லதே' என்ருன்.

நான் ஏன் பதில் பேசுகிறேன் ?

'நல்ல தரும சங்கடங்க. அன்னிக்கு மழை பேஞ்சுதுங்களே, அந்த சத்தத்துலே தூக்கம் பிடிக்கல்லே முழுச்சுக்கிட்டிருந்தேன். யாரோ வாசல் கதவைத் தட்டிஞல் போல் இருந்தது. இந்த மழையிலே என்னைத் தேடிக்கிட்டு யார் வர இருக்காங்க? காத்தாகத்தான் இருக்கும் இன்னு நெனைச்சுக்கிட்டு ரெண்டுத் தட்டுக்குச் சும்மா இருந்தேன். மூணுந்தட்டும், 'சாமியாரே' என்று பேர் சொல்லிக் கூப்பிட்டாப் போலும் கேட்டது. சிம்மிணி விளக்கை எடுத்துக்கிட்டு வந்து, வாசல் கதவைத் தெறந்து பார்த்தேன். பஞ்சவர்ணம் மழையில் சொட்டச் சொட்ட நின்னுக்கிட்டிருந்தா. என்னன்னு கேட்டதுக்கு, 'சொல்றே'ன்னு சொல்லிட்டு, வீட்டுக்குள்ளார வந்து கூடத்தில் நின்ஞ.

'எல்லாம் சொல்றேன். எதுனச்சும் காஞ்ச வேஷ்டி இருந்தாக் குடுங்க' அப்படீன்ஞ. அப்பவே எனக்கு சுருக்கின்னுச்சு. வண்ணான் வேட்டியும் அங்கவஸ்திரமும் குடுத்தேன். ரேழியில் போய் அதையெல்லாம் கட்டிக்கிட்டு, ஈரப்புடவையைப் பிழிஞ்சு தூணில் கட்டிஞ. 'புருசனோடெ சண்டையா ?' இன்னேன்.

அவ நடந்ததையெல்லாம் சொன்ஞ. ஆகவே, நான் கடன் கொடுத்ததுதான் அதிர்வேட்டு மருந்துக்கு தீ வச்சாப்போல ஆயிடுச்சுன்னு வருத்தமாப் போச்சு. அவ அதோடெ விடல்லே. அதுக்கு அப்பறம் சொன்னதுதான் தூக்கி வாரிப்போட்டுது. சின்னப் பிள்ளையா இருந்தப்போ என்னைக் கட்டிக்கிறயான்னு பஞ்சவர்ணத்தை விளையாட்டாகக் கேட்பேன். அதைச் சொல்லிக்காட்டி, அதுக்காகத்தான் இப்பொ வந்திருக்கேன்னு சொன்ஞளே, பார்க்கணும் !'

'அப்பொ கட்டிக்கறேன்னு விளையாட்டாச் சொன்னேன். இப்பவும் அதையே மெய்யாத் தெரிஞ்சு சொல்றேன்' இன்னுள். பாதிராத்திரியிலே ஒரு பொண்ணு இப்படி வந்து தாறுமாருப் பேசிஞ, எப்படியிருக்கும். என்ன பதில் சொல்றது? ஆறு ஒண்ணுமட்டும் தெரிஞ்சுட்டுது, அவ வண்டோடெ வாழமாட்டான்னு. 'காலையிலே பேசிக்கலாம். சோறு தின்னியா?'ன்னு பேச்சை மாத்தினேன். 'இல்லே'ன்னவுடன் சோத்தையும் குழம்பையும் போட்டு, அவகிட்ட குடுத்தேன். சாப்பிட்டதும் சஞ்சலமேயில்லாம தூங்கிட்டா. காலையிலே நான் போறதுக்கு முன்னுலே கிழவியே வந்துட்டா. நடந்ததையெல்லாம் சொன்னேன். பஞ்சவர்ணத்தோடெ கிழவி ரொம்ப நேரம் பேசிஞ. அப்பாலே, வண்டின் தாயாரு, பஞ்சாயத்தாரு எல்லாரும் வந்தாங்க. ஒண்ணும் பிரயோசனப்படல்லே. என்கூட இருக்கு. ஆயாகிட்டெ போக மாட்டேங்குது. நான்கூட வண்டைப் பார்த்துப் பேசினேன். பிடிச்ச பிசாசு புளிய மரக் கிளையை முறிச்சுப்போட்டுட்டுப் போறேன்னு சத்யம் பண்ணுமே, அந்தக் கணக்கா முடிவா 'வாணவே வாணும்' இன்னுட்டா.

'அப்பொ என்ன பண்ணப் போறே?'

நாமா செய்யறேும்? அதுபாட்டிலே நடக்குது அது. அதை வெரட்டறதுக்கு மனசு வரல்லே. எனக்கு ஒரு பெண்ணோ, தங்கச்சியோ இது மாதிரி செஞ்சுப்பிட்டு வந்தூட்டா வெரட்ட முடியுங்களா? அப்படித்தான்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்...

இப்பொழுது வழக்கம்போல் பங்களாவிலிருந்து வண்டு வெளியே வருகிறுன், போகிறுன். வழக்கம்போல் எங்கள் வீட்டில் குழம்பு, வியஞ்சனம் வாங்கிக் கொள்கிறுன். பங்களாவிலிருந்து இரவில் 'நைட்குவீன்' மணம் உலா வருகிறது.